**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# தானியேல் 3

தானியேல் மூன்றாவது அதிகாரத்தை நாம் கீழே கண்டவாறு பிரித்துப் பார்க்கலாம்.

1. நேபுகாத்நேச்சர் ஒரு பொற்சிலையை உருவாக்கி அனைவரையும் பணிந்துகொள்ள கட்டளையிடுதல். (வசனம் 1-7)
2. மூன்று யூதர்கள் பொற்சிலையை பணிந்துகொள்ள மறுத்தல் (வசனம் 8-12).
3. தண்டனையை மீறி பணிந்துகொள்ள மறுத்தல். (வசனம் 13-18)
4. அக்கினிச் சூளைக்குள் அவர்களைப் போடுதல். (வசனம் 19-23)
5. தேவனின் அக்கினிச் சூளை விடுதலையின் வல்லமை (வசனம் 24-27)
6. நேபுகாத்நேச்சர் தேவனையும் மற்றும் மூவரையும் கனப்படுத்தி கௌரவப்படுத்தல்.(வசனம் 28-30)

## முக்கிய குறிப்பு

இந்த அதிகாரத்திலுள்ள அக்கினிச் சூளை சம்பவத்தில் தானியேல் இருக்கவில்லை. அநேகர் இதைத் தவறாகப் புரிந்துகொண்டு விடுகிறார்கள்.

## பொற்சிலை

கடந்த வாரம் நாம் இரண்டாம் அதிகாரத்திலிருந்து நேபுகாத்நேச்சர் எப்படி தேவனை மகிமைப்படுத்தினார் என்றும், தானியேல் மற்றும் அவரது நண்பர்கள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ உயர்த்தப்பட்டார்கள் என்பதைக் குறித்தும் அறிந்து கொண்டோம். இன்றைக்கு நாம் காணும் இந்த பொற்சிலை சம்பவம் அதிகாரம் ஏறத்தாழ 7 வருடங்களுக்குப் பின்னால் நடைபெறுகிறது.

சிலையை வணங்குவதென்பது பாபிலோனியர்களுக்கு புதிதல்ல. இங்கே ஒரு பிரமாண்டமான பொற்சிலை செய்யப்பட்டு அந்த இராஜ்ஜியத்திலுள்ள அனைவரும் அழைக்கப்பட்டு ஆரவாரத்தோடு அர்ப்பணஞ் செய்யப்படுகிறது. பொற்சிலைக்கு முன்பாக எக்காளம், நாதசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரா என்பன இசைக்கப்படுகின்றன. நன்றாகக் கவனியுங்கள். அநேக இசைக்

கருவிகள் அந்நிய தேவர்களைப் பணிந்துகொள்வதற்கே உபயோகப்படுகின்றன.



பொற்சிலை 90 அடி உயரமும் 9 அடி அகலமுங்கொண்டது. அது ஏறக்குறைய நம்மைக்காட்டிலும் 15 மடங்கு உயரம் கொண்டது.

ஏன் இவ்வளவு பெரிய பொற்சிலையை உருவாக்கினார்? நாம் இரண்டாவது அதிகாரத்தில் கண்டதுபோல தலை மாத்திரம் பொன்னாக இருந்தால்தான் என்னுடைய இராஜ்ஜியம் நொறுக்கப்படும். ஆனால் அதுவே முழுவதும் பொற்சிலையாக இருந்தால் ஒருவேளை எனது இராஜ்ஜியம் முடிவில்லாமல் இருக்குமென்று எண்ணினாரோ?

ஆராதனை
ஆதியில் ஏற்பட்ட முதலாவது பாவம் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.
மத்தேயு 4:8-10.

இன்றைக்கு நாம் வணங்கும் சிலை எது? சுயம், கணவன், மனைவி, குழந்தைகள், வேலை, பணம், சொத்து, ஆரோக்கியம், புகழ் ஏன் நமது ஊழியமும்தான்.

தேவன்மேல் மாறாத பக்திகொண்டவர்கள்
(வசனம் 16-18) *நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்.* *<u>அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.</u>*
*18.* ***<u>விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை,</u>*** *நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.*

நாங்கள் ஒருவேளை செத்தாலும் பரவாயில்லை; ஆனால் சிலையை வணங்கமாட்டோம். எஸ்தர் ராஜாத்தி "செத்தாலும் சாக நான் தயார்" என்று சொன்னாள். எஸ்தர் 4:16

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நாம் எதற்குப் பயப்படவேண்டும் என்று நமக்கு அழகாக காட்டிக்கொடுத்தார்.
மத்தேயு 10:28, *ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; <u>ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்</u>.*

மாற்கு 8:38, *ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார் என்றார்.*

அப்போஸ்தலர் 5:28-29
வெளி 12: 11, ***<u>மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல்</u>, ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.***

மிகப்பெரிய சோதனை - தேவனுக்குப் பெரிய மகிமை!

வெளி 13:4 & 8, ***அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, <u>மிருகத்தையும் வணங்கினார்கள்.</u>***
***உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் <u>பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.</u>***

ஏழு மடங்கு அதிகமான அக்கினிக் சூளை - அதில் இவர்களைப் போடுவதற்கு தயாராயிருந்தவர்கள் எரிந்து மடிவதைக் காண்கிறோம்.

யோவான் 16:33, 14:27 - இந்த வசனங்களில் இயேசுகிறிஸ்து தனது பிரசன்னம் நம்மோடு இருக்குமென்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

*<u>ஒரு கதை</u>*
ஒரு பணக்காரர் தன்னுடைய பண்ணையில் வேலை செய்யும் ஒரு வேலையாள் ஓய்வு நாளில் வேலை செய்ய மறுத்ததினால் அவனை வேலையைவிட்டு நீக்கிவிடுகிறார். பின்னால் அங்கு உள்ள ஒரு வங்கிக்கு ஆள் வேண்டும் என்றபோது அவனை நியமிக்கும்படி வலியுறுத்துகிறார். காரணம் தன்னுடைய கொள்கையில் வைராக்கியம்.

## கிறிஸ்து வெளிப்பாடு
நேபுகாத்நேச்சரால் அடையாளங் காணப்பட்ட நான்காவது மனிதன் வேறு யாருமல்ல, தேவனுடைய குமாரன். ஆகவே அவர் தேவனை மகா பெரிய தேவனென்று அழைக்கிறார். இந்தத் தேவனை எல்லாரும் பணிந்துகொள்ள வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கின்றார்.

நீங்கள் தேவனுக்காக வைராக்கியம் பாராட்டும்போது தேவன் உங்களுடைய வாழ்வில் உண்மையில் தான் யாரென்பதைக் காட்டுவார். இப்போதும் நீங்கள் உங்கள் வாழ்வில் தேவன் யாரென்பதைக் காட்டுவதற்கு ஒரு சந்தப்பம் கொடுப்பீர்களா?

எபிரேயர் 13:5 ***நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.***